# *புனித அருளப்பர்*

இவர் செபதேயுவின் மகனும் பெரிய யாகப்பரின் சகோதரனுமாவார். மணம் முடிக்காதவர். இவர் இயேசுவை மிக நேசித்தவர். அப்போஸ்தலர்களில் மிகக் குறைந்த வயதுள்ளவர். நம் ஆண்டவரது பகிரங்க வாழ்வின் தொடக்கத்திலேயே இவர் அழைக்கப்பட்டார். ஆண்டவர் தாபோர் மலையில் உருமாறினதையும், பூங்காவனத்தில் மரண அவஸ்தைப்பட்டதையும் கண்டவர். ஆண்டவரது பாடுகளின் போது ஏனையோர் ஆண்டவரைக் கைவிட்டு மறுதலித்தார்கள். இவரோ பிரமாணிக்கமாய் சிலுவை அடியில் நின்றார். உயிர்விட இருந்த நம் இரட்சகர் தம்முடைய மாசற்ற மாதாவை இவரிடம் ஒப்படைத்தார். இவர் முக்கியமாக எருசலேமிலும் எபேசுஸ் நகரிலும் வாழ்ந்து சின்ன ஆசியாவில் பல சபைகளை நிறுவினார். நான்காவது சுவிசேஷத்தையும் மூன்று நிருபங்களையும் திருவெளிப்பாடு நூலையும் எழுதினார். இவரைப் பிடித்து உரோமைக்குக் கொண்டு போனார்கள். தொமிசியன் பேரரசின் ஆணையின்படி இவரைக் கொதிக்கிற எண்ணெய்க் கொப்பறையில் போட்டார்கள். அதிலிருந்து இவர் யாதொரு தீங்குமின்றி வெளிவந்தார். அரசன் இவரைப் பாட்மோஸ் தீவுக்கு நாடு கடத்தினான்.

இவருக்கு முதிர் பிராயம் ஆகிவிட்டது. ஊர் ஊராய்ப் போய்ப் பிரசங்கிக்க முடியவில்லை. இவரைக் கோவிலுக்குத் தூக்கிக் கொண்டு போவார்கள். நெடுநேரம் இவரால் பேச முடியாது. "என் சிறிய மக்களே ஒருவர் ஒருவரை நேசியுங்கள்" என்று திரும்பத் திரும்பச் சொல்வார். "இதையே ஏன் வற்புறுத்திச் சொல்கிறீர்கள்?" என மக்கள் கேட்பார்கள். அருளப்பரோ, "இதை மட்டும் செய்தால் போதும். மோட்சம் சேர்வீர்கள்" என்பார்.

"கடவுளை நேசியுங்கள்; அயலாரைக் கடவுளுக்காக நேசியுங்கள்; ஆசாபாசங்களை அடக்குங்கள். இவ்வுலகை நேசிக்க வேண்டாம். மறு உலகத்துக்காகவே வாழுங்கள். இவ்விதம் புனித அருளப்பர் தமது நிருபத்தில் கூறுகிறார்.

இவர் எபேசுஸ் நகரில் நூறாம் ஆண்டில் இறந்தார். இவரது கல்லறை மீது அழகிய ஆலயம் அமைக்கப்பட்டது. மகமதியர்கள் அதை மசூதியாக மாற்றி விட்டார்கள்.

**சிந்தனை:**

"காணக்கூடிய மனிதனை நேசியாதவன் காணக்கூடாத கடவுளை எப்படி நேசிக்க முடியும்?" என்று புனித அருளப்பர் கேட்கிறார். அயலாரைப் பற்றி அன்பாக நினைத்து, அன்பாகப் பேசி, அன்பாக தீர்மானிப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, நான் என்னை நேசிப்பது போல் அயலாரையும் நேசிக்கும் வரம் தாரும்.